**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.**
**முன்னிலை:திரு. இரா. அசோக்குமார் B.Com, B.L .,**
**நீதித்துறை நடுவர், மணப்பாறை,**
**2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 03–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**STC.No. 706/2025**
**(CNR NO. TNTP10-001409-2025)**

.....

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>வளநாடு காவல் நிலையம்,<br>குற்ற எண்.145/2023 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | பானுமதி,<br>க/பெ. பெருமாள் |
| குற்றப்பிரிவு | ச/பி.294(b), 323, 506(i) IPC |
| வனையப்பட்டது | ச/பி.294(b), 323, 506(i) IPC |
| தீர்மானம் | **முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள U/S.294(b), 323, 506(i) IPC–ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

குற்றம்சாட்டப்பட்டவர்கள் விபரம்

| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|
| பானுமதி | பெருமாள் | இந்து | கூலி | குறும்ப தெரு, ஊனையூர் அஞ்சல், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம். | 40/ 2023 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 24.08.2023 |

| | | |
|---|---|---|
| புகார் கொடுத்த நாள் | : | 29.08.2023 |
| எதிரிகளை கைது செய்த நாள் | : | 04.09.2023 |
| பிணை விடுவிப்பு | : | 04.09.2023 (Bailed By Police) |
| Committal | : | – |
| விசாரணை துவக்கம் | : | 04.06.2026 |
| விசாரணை முடிவு | : | 23.06.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 04.09.2023 |
| Date of Questioning | : | 09.09.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | –– |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br>PW1 04.06.2026 04.06.2026<br>PW2 04.06.2026 04.06.2026<br>PW3 04.06.2026 04.06.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 11.06.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் | : | Nil |

| | | |
|---|---|---|
| தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | | |
| கால தாமதத்திற்கான காரணம் | : | -- |

இவ்வழக்கானது 02.06.2025–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 23.06.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் திருமதி. விஜயாமணி, M.L., உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. பாக்கியராஜ் அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு 173 – ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

**<u>2. குற்ற முறையீட்டின் சுருக்கம்</u>:–**

இவ்வழக்கின் வாதியின் சித்தப்பா மகள் பானுமதி என்பவரை கடந்த 17 வருடங்களுக்கு முன்பு நகரப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்து, அவரது கணவர் இறந்து விட்டதால் அவரது அம்மா ஊரான ஊனையூருக்கு வந்து அவரது அம்மாவுடன் வசித்து வருகிறார் என்றும், இந்நிலையில் எதிரி பானுமதி வாதியையும், ஊர்கார்களையும் அவரது வீட்டின் அருகேயுள்ள பாதை வழியாக செல்லும்போது தகாத வார்த்தைகளால் திட்டியதால் வாதி ரெங்கசாமி தனது சித்தப்பா மகள் முறையில் எதிரி பானுமதியை பல முறை கண்டித்ததால், இருவருக்கும் விரோதம் ஏற்பட்டநிலையில் கடந்த 28.08.2023 ம் தேதி மாலை

சுமார் 15.30 மணிக்கு பானுமதி வீட்டின் அருகில் வாதி ரெங்கசாமி அவரது உறவினரிடம் கைபேசியில் பேசிக்கொண்டிருந்ததை பார்த்த எதிரி பானுமதி தன்னை பற்றிதான் யாரிடமோ பேசிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்து வாதியின் அருகில் வந்து வாதியை பாரத்து நீ என்னடா இங்கு நின்று போன் பேசிக்கொண்டிருக்கிறாய், நீயெல்லாம் ஒரு ஆளுப்புண்டையா, போடா தேவடியா மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டி, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் டா என்று சொல்லி அருகில் கிடந்த குச்சியை எடுத்து வாதியின் முதுகிலும், முன்பக்க தலையிலும் அடித்து வாதிக்கு தலையில் சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரியின் குற்றச்செய்கையானது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(i)IPC ன்படி தண்டிக்கத்தக்க குற்ற செய்கைக்காக வளநாடு காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளரால் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவே அரசு தரப்பு வழக்காகும்.

<u>3. வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்</u>:-

குற்ற பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு, எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு மறக்காமல் இவ்வழக்கின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 240(1)ன் படி எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு **U/S.294(b), 323, 506(i) IPC**-ன் படி குற்றம் சாட்டப்பட்டு குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 240 பிரிவின் கீழ் அவரிடம் வினவிய போது எதிரி பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.விசாரணை:**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சான்றுரைகளின் வாயிலாக தெரியவரும் சாராம்சம் பின்வருமாறு

**(5.1).** அ.சா.1. திரு. ரெங்கசாமி என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றும், ஆஜர் எதிரி எனக்கு உறவினர் என்றும், அவருடன் நான் சமாதானமாக செல்கிறேன் என்றும், என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், சம்பவ நேரத்தில் கும்பலாக இருந்ததால் என்னை யார் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(5.2)** அ.சா.2. திருமதி. பவித்ரா என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன் என்றும், 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றும், அ.சா.1 எனது கணவர் ஆவார் என்றும், ஆஜர் எதிரி எனக்கு உறவினர் ஆவார் என்றும், அவருடன் நாங்கள் சமாதானமாக செல்கிறோம் என்றும், இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(5.3)** அ.சா.3. திரு. நல்லதம்பி (காவல் உதவி ஆய்வாளர்) என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், நான் தற்போது வளநாடு காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், மேற்படி காவல்நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணிகண்டன் என்பவரை அவருடன் பணிபுரிந்த வகையில் அவரின் கையெழுத்து மற்றும் எழுத்து நடை உள்ளிட்டவை அவருடன் பணிபுரிந்த வகையில் எனக்கு தெரியும் என்றும், அவர் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டதால் இவ்வழக்கின் காலவிரயத்தை தவிர்க்கும் பொருட்டு இவ்வழக்கின் நீதியின் நலன்கருதி அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 29.08.2023 அன்று பகல் 12.30 மணியளவில் திரு.மணிகண்டன் நிலைய அலுவலில் இருந்த போது ரெங்கசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் வளநாடு காவல்நிலைய குற்ற எண்.145/2023 u/s.294(b),323, 506(1)இதச பிரிவின் ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், தொடர்ந்து அவர் இவ்வழக்கினை புலன் விசாரணக்கு எடுத்துக்கொண்டு 29.08.2023 அன்று மதியம் 01.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் பிச்சை, ராசம்மாள் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், தொடர்ந்து இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்தது உண்மை என தெரியவந்ததால் அவரை கைது செய்ய தேடிய போது அன்றைய தினமே எதிரி பானுமதி நிலையம் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும்,

தொடர்ந்து இவ்வழக்கில் காயமடைந்த ரெங்கசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வெங்கடேஷ் என்பவரை விசாரித்து அவர் காயமடைந்தோருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பெற்று பதிவு செய்துள்ளார் என்றும், அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து 04.09.2023 அன்று எதிரி பானுமதிக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. **<u>குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313–ன் படியான நடவடிக்கை</u>:**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313(1) (b)–ன் படி கேள்விகள் கேட்க எதிரி அதை பொய் சாட்சி என மறுத்து கூறினார். எதிர் தரப்பில் சாட்சியம் எதுவும் முன் வைக்கப்படவில்லை இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**7. இவ்வழக்கில் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(i) IPC–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பால் அரசு தரப்பினரால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை ஆகும்.**

<u>8. தீர்வு;</u>

(8.1) பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் இரண்டுமே ஒன்றுக்கொன்று பிணைந்து இருப்பதால் இரு பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

(8.2) இந்திய சாட்சி சட்டம் பிரிவு 101 படி எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பில் சார்ந்ததாகும் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3. வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் அரசு தரப்பில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323 மற்றும் 506(2)–ன் கீழான குற்றங்களின் உட்கூறுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? மற்றும் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

(8.3) அ.சா.1 வழக்கில் புகார்தாரர் ஆவார். அவரின் சாட்சியத்தினை முழுமையாக பரிசீலனை செய்து அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அவர் இவ்வழக்கின் ஆணிவேரான புகார்தாரர் கடந்த 28.08.2023ம் தேதி மாலை சுமார் 15.30 மணிக்கு பானுமதி வீட்டின் அருகில் வாதி ரெங்கசாமி அவரது உறவினரிடம் கைபேசியில் பேசிக்கொண்டிருந்ததை பார்த்த எதிரி பானுமதி தன்னை பற்றிதான் யாரிடமோ பேசிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்து வாதியின் அருகில் வந்து வாதியை பாரத்து நீ என்னடா இங்கு நின்று போன் பேசிக்கொண்டிருக்கிறாய், நீயெல்லாம் ஒரு ஆளுப்புண்டையா, போடா தேவடியா மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டி, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் டா என்று சொல்லி அருகில் கிடந்த குச்சியை எடுத்து வாதியின் முதுகிலும், முன்பக்க தலையிலும் அடித்து வாதிக்கு தலையில் சொற்பக்காயத்தை ஏற்படுத்தியும் சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், என்னிடம் காட்டப்படும்

புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், சம்பவ நேரத்தில் கும்பலாக இருந்ததால் என்னை யார் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் எதிரியல் எனக்கு காயம் ஏற்படவில்லை என புகார்தாரர் வாக்குமூலத்தையே மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி அவர்கள் சாட்சியமானது அரசு தரப்பு சான்று புகார் வாக்குமூலத்தின் நம்பக தன்மையை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

(8.4) மேலும் அ.சா.1 எதிரிகள் குறித்தும் அவர்களின் குற்றம் ஒரு செய்கை குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.அ.சா.1.இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323 மற்றும் 506(2)ன் கீழான எந்த ஒரு உட்கூறு குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரிகள் அ.சா.1 ஐ அடிக்கவில்லை என்றும், தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.5) அ.சா.1 ன் சாட்சியமானது ஆவண சாட்சியமான அ.சா.ஆ 6.விபத்து பதிவேட்டுக்கு முரணாக அமைந்துள்ளது. மேற்படி சாட்சியின் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து பார்த்ததில் அ.சா.1 மருத்துவரிடம் தனக்கு சண்டையில் காயம் ஏற்பட்டுள்ளதாக சொல்லி உள்ளது தெரிய வருகிறது. ஆனால் அவர் மருத்துவரிடம் சொன்ன தனது முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக முதல் விசாரணையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் கீழே விழுந்தது காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அவரது சாட்சியமானது எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு வழக்கினை நிலை நாட்டு வகையில் அமையவில்லை.

(8.6) அ.சா.2 வழக்கு சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். அவர்களின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் அவர்கள்

அனைவரும் எதிரிகள் குறித்து தெரியாது என்றும் வழக்கு விவரம் குறித்து எதுவும் தெரியாது என்றும்,போலீசார் அவர்களை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்கள் அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாக உள்ளது என்பது தெரிய வருகிறது. அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த எதிரிகளை அடையாளம் காட்டவில்லை. அவர்கள் எதிரிகளின் குற்றமுறு செய்கை குறித்து அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற வழக்கு சம்பவம் குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.எனவே, அவர்களது சாட்சியும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை. மேற்கண்ட சாட்சியத்தின் நம்பகத்தன்மை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

(8.7) அரசு தரப்பில் இறுதியாக புலன் விசாரணை செய்த அதிகாரி அவர்கள் அ.சா.4 ஆகவிசாரிக்கபட்டார். அவர் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்தும், எதிரி கைது செய்யப்பட்ட குறித்தும், சம்பவ இடத்தில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியது குறித்தும் எதிரிகள் மீது குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அவரது சாட்சியத்தினை ஒத்து வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை.இந்த வழக்கின் புகார்தாரரே புகார் வாக்குமூலத்தை மறுத்து சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பெரும் பிறழ்சாட்சியாகி விட்டார். அடுத்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் எதிரிகளுக்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கிற்கு மாறாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(8.8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த **சரஸ்வதி மற்றும் பலர் எதிர் அரசு 2002 Crl LJ 1420** என்ற தீர்ப்பின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)ன் கீழான குற்றத்தின் உட்கூறுகள் ஆபாச சொற்களை ஒரு நபர் பொது இடத்தில் மற்றவருக்கு எரிச்சல் ஊட்டும் வகையில் மொழிதல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய அரசு தரப்பு வழக்கில் மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள சட்ட பிரிவு 294(b)–ன் கீழான எந்த ஒரு உட்கூறும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிலைநாட்டப் படவில்லை. மேலும் இந்திய தண்டனைச் சட்ட பிரிவு 323 ன் கீழான குற்றத்தின் உட்கூறுகளின் ஒருவரின் உடலுக்கு அல்லது பெயருக்கு பீதி விளைவிக்கும் உட்கருத்துடன் மிரட்டல் விடுத்து அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஒருவர் சட்டப்படி செய்ய கட்டுப்பட்டிறாத செய்கை செய்வதையும் அல்லது சட்டப்படி அவர் செய்ய உரிமை பெற்றிருக்கிற செய்கை எதனையும் செய்யாது விடுவித்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

(8.9) ஆனால் தற்போதைய அரசு தரப்பு வழக்கில் மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள சட்ட பிரிவுகள் 294(b), 323,மற்றும் 506(1)ன் கீழான எந்த ஒரு உட்கூறும் நிலை நாட்டப்படவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சிகளின் சாட்சிகள் மூலம் நிலைநாட்ட அரசு தரப்பு தவறிவிட்டது என்று என் நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள U/S.294(b), 323, 506(i) IPC–ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

(9) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப் படவில்லை. எதிரிகள் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 03 நாள் அவை அறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R Digitally signed by ASHOKUMAR R Date: 2026.07.03 14:18:00 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

<u>இணைப்பு:</u>

<u>அரசுதரப்புசாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1. | : | திரு. ரெங்கசாமி |
| அ.சா.2. | : | திருமதி. பவித்ரா |
| அ.சா.3 | : | திரு. நல்லதம்பி (காவல் உதவி ஆய்வாளர்) |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | : | புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் (திரு. ரெங்கசாமி) |
| அ.சா.ஆ.2. | : | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3. | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | : | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

ASHOKUMAR R Digitally signed by ASHOKUMAR R Date: 2026.07.03 14:17:56 +0530

நீதித்துறை நடுவர்
மணப்பாறை.

**குறிப்பு :**

1. வழக்கில் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.